அலவ்வ பிரதேச சபை - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அலவ்வ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அலவ்வ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட சேதனப் பசளை மிகுதி இருப்பின் பெறுமதி ரூபா 181,410 மீளாய்வாண்டின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	உற்பத்தி கணக்கு தயாரிக்காமையின் காரணமாக அட்டுறு அடிப்படையில் உரிய உர இருப்பு ஆண்டில் விற்பனையாகக் கருதி கணக்கு வைக்கப்பட்டுள்ளது.	சரியாக கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	புதிய மகரிச்சிமுள்ள உப அலுவலகக் கட்டிடத்தில் கடந்த ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 616,312 அபிவிருத்தி செய்தல் கணக்கு வைக்கும் போது அந்த செலவினம் மீளாய்வாண்டின் போது மூலதனமாக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டிற்கு உரிய பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 9,888,993 ஆக இருந்த போதும் அது ரூபா 11,484,693 ஆக ரூபா 1,595,700 இனால் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய பெறவேண்டிய	2025 ஆம் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 380,500 பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.		
(ஈ)	ஆளநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்த போதும் 2024 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படாத 03 செயற்திட்டங்களில் ரூபா 476,225 பெறுமதி மற்றும் ஆளநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெறாத ரூபா 25,000 ஆன நோயாளர் உதவி செலவினம் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	ஆளநரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் 2025 ஆம் ஆண்டில் கடன் கொடுத்தோரின் கீழ் நிறைவேற்றுவதற்கும் அங்கீகாரம் கிடைக்காத நோயாளர் உதவி நிகழ்ச்சித் திட்டம் 2025 ஆம் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது கடன் கொடுத்தோரில் இருந்து அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	கடன்கொடுத்தோரை இனங்காணல் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 7,122,311 ஆக இருந்த போதும் பட்டோலைகளின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 7,258,011 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 135,700 இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது.	2025 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பட்டோலைகளில் சரியாகத் தயாரித்து அதன் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 38(2) ஆம் பிரிவு	நிதி கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமாக உள்ளகக் கட்டுப்பாடு காணப்படுகின்றமைக்கும் அந்த முறைமையின் ஆக்க பூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமானதாக பேணிச்	2025 ஆம் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறை ஒன்று பேணிச் செல்லப்படல் வேண்டும்.

		செல்வதற்காக தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த மைக்கும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்ற வேண்டிய எழுத்துமூல மீளாய்வின் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.		
(ஆ)	2018 திசெம்பர் 31 ஆந் திகதிய இலக்கம் 04/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் 2023 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய இலக்கம் வ.ப.பா.தெ/2/10/11 என்ற உள்ளூராட்சி ஆணையாளரின் (வடமேல்) கடிதம்	சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்தில் இருந்து அல்லது உள்ளூராட்சி நிறுவனங்கள் அமுலில் உள்ள சட்டத்தின் சொத்துக்கள் மீள் மதிப்பீடு தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் குழு ஒன்று நியமித்து காணி மற்றும் கட்டிடங்களை உள்ளடக்கிய சகல சொத்துக்களும் மதிப்பீடு செய்ய வேண்டி இருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது காணி மற்றும் கட்டிடங்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2006 இன் அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை			
(i)	3.4.3(இ)	பதிவு செய்துள்ள வழங்குனர்களிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு பெறுகைக் குழு தீர்மானித்திருக்கும் போது காகிதாதிகள் கொள்வனவு செய்வதற்காக பதிவு செய்யாத மூன்று வழங்குனரிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தது.	சபை அதிகாரப் பிரதேசத்தில் சந்தர்ப்பம் ஒன்றை பெற்றுக் கொள்ளும் நோக்குடன் நகரத்தின் புத்தக விற்பனை நிறுவனங்கள் இரண்டில் இருந்து கூறுவிலைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.	2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	5.6.1(அ)	பெறுகைகளை மேற்கொள்வதற்கு உள்ள பொருட்கள் அல்லது	தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின்	2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக்

	வேலைகளுக்கான மாதிரிகள் உரிய பெறுகை நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தேவையான அளவினை விட வேறு முறையில் விபரங்கள் சமர்ப்பிக்க முடியாதிருந்த போதிலும் 2024 மார்ச் இல் டைல் கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான மாதிரிகள் தயாரிக்கும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிரகாரம் 2’’x2’’ அளவில் டைல் பெறுகைகளுக்கு கோரிக்கை விடப்பட்டதுடன் நிறுவனத்தின் தீர்மானத்தின் பிரகாரம் நிறம் தீர்மானிக்கப்பட்டுள் ளது.	கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ) 2018 சனவரி 26 ஆந் திகதி இலக்கம் 02/2018 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை 03 பிரிவு மற்றும் 05 ஆம் பிரிவு	சுற்றறிக்கையின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்காமை மற்றும் பதவிக் காலத்தில் ஒவ்வொருவருக்காகவும் இனங்காணப்பட்ட திறன் இலக்கினை அடைந்து கொள்வதற்காக பொருத்தமான இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துதல் தொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.	எதிர்காலத்தில் மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதற்கும் இயலளவு அபிவிருத்தித் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ம் நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,135,458 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,171,327 ஆகும்.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்கு உரிய வங்கி நடைமுறைக் கணக்கில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காசு மீதி ரூபா 27,353,959 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்று காசு மீதி ரூபா 27,586,495 ஆகும். நீண்டகாலமாக கொண்டுவரப் படுகின்ற ரூபா 232,536 வேறுபாட்டை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேறுபாட்டுக்குரிய காரணங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000	ரூபா '000
i.	ஆதன வரியும் வரியும்	8,260	8,203	8,262	1,951	8,071	7,941	6,892	1,050
ii.	வாடகை	13,075	12,888	13,040	55	10,787	1,149	947	201
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	1,035	760	760	-	1,020	881	881	-
iv.	ஏனைய வருமானம்	52,237	44,230	44,230	-	89,437	37,084	37,084	-
	மொத்தம்	74,607	66,081	66,292	2,006	109,315	47,055	45,804	1,251

2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது அடைந்து கொள்வதற்கு இயலுமான வகையில் பொருத்தமாக தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 12 சதவீத அளவு சிட்டையிடப்பட்டிருக்க வில்லை.	வருமான மதிப்பீட்டில் 12 சதவீத அளவான தொகைக்கு சிட்டை இடாமையினால் வருமானம் குறைவடைந்துள்ளதுடன் எதிர்காலத்தில் மதிப்பீட்டுக்கு சிட்டையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	பொருத்தமான மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் கடந்த ஆண்டின் இறுதி நிலுவை வருமானத்துடன் சேர்க்கப்பட்டு சேகரிக்கப்பட்ட வருமானம் கழிக்கப்பட்ட பின்னர் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் பெற வேண்டியதாக இருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் இந்த தொகைகளுக்கு இடையே பரஸ்பர வேறுபாடு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களில் காணப்படுகின்ற பரஸ்பர வேறுபாடுகளை சரி செய்து சமர்ப்பிக்கப்படும்.	சரியாக தரவுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(இ) வீத வரி

(i)	2024 சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ஆதனவரி நிலுவை மீதியான ரூபா 1,955,158 மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 768,285 மற்றும் மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 4,573,780 தொகையில் ரூபா 1,122,579 ஆக ரூபா 1,890,864 தொகை மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக காணப்பட்டது.	எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	வடமேல் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தில் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதி இலக்கம் 2010/02 என்ற சுற்றறிக்கை 05 ஆம் அத்தியாயத்தின் (viii) ஆம் பந்தியின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டு ஆதனவரி திருத்தம் செய்யவேண்டி இருந்ததுடன் நீண்டகாலமாக மீள்திருத்தம் செய்யப்படாத வரி அல்லது கட்டணம் தொடர்பான சபை விரைவாக கவனம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு ஆதனவரி மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. அதன் காரணமாக சபைக்கு கிடைக்க வேண்டிய கணிசமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீண்டும் மதிப்பீடு ஒன்றிற்காக முற்பணமாக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு 2023 ஒக்தோபர் 31 ஆந் திகதி ரூபா 340,000 தொகை செலுத்தப்பட்டுள்ளது.	05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனவரி மதிப்பீடு திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய 06 கணக்குகள் ரூபா 7,530,595 மீதி காணப்பட்டதுடன் அந்த மீதியில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையில் ரூபா 7,369,012 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதி ரூபா 161,637 காணப்பட்டது. இந்த தொகைகளை அறவிடுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அறவிடுவதற்கும் அல்லது பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.	பெற வேண்டிய வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இவல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 15 கணக்குகளில் ரூபா 32,284,844 மீதி காணப்பட்டதுடன் அந்த மீதிகளில் 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்திற்குரிய ரூபா 31,832,762 மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதி ரூபா 452,082 காணப்பட்டது. இவர்களின் இருப்பு தொடர்பாக உறுதிப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டுக்குரிய கடன் கொடுத்தோர் பெறுமதி மாத்திரமாக இருந்ததுடன் உடன்படிக்கை பிணை மற்றும் பாதுகாப்பு பிணை உடன்படிக்கைக் காலம் முடிவடையும் வரை விடுவிக்க முடியாதுள்ளது.	தொடர்ந்தும் வைப்பாக நிறுத்தி வைக்க வேண்டிய நிதி தவிர ஏனைய செலுத்த வேண்டிய தொகைகளை தீர்த்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2024 ஆம் ஆண்டின் போது அனுமதியற்ற நிர்மாணங்கள் சம்பந்தமாக 32 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அதில் 16 முறைப்பாடுகள் தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க சபை தவறியிருந்தது.	2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பான களப் பரிசோதனையை மேற்கொண்டு கடிதங்களை அனுப்பி தீர்வு வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் சில முறைப்பாடுகள் தொடர்பாக இடங்களில் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளது.	முறைப்பாடுகளுக்காக உரிய தீர்வினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	1989 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 59, 60 மற்றும் 67 பிரிவுகளின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டுக்குரிய கைத்தொழில் மற்றும் வணிக வியாபாரம் தொடர்பான பட்டியல் ஒன்று தயாரித்து அது 2024 மார்ச் 31 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படாது இருந்ததுடன் அதில் 65 மற்றும் 67 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கொடுப்பனவுகளை புறக்கணித்தவர்களின் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் இந்த ஆவணங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்	1989 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2019 சனவரி 10 ஆந் திகதி இலக்கம் 2019/02 என்ற உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் முன் மற்றும் எழுத்து மூல அங்கீகாரம் இன்றி வாடகை உரித்தை கையளிக்க முடியாதிருந்த போதிலும் அளவ பொதுச் சந்தையில் 28 கடைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது கடை இலக்கம் 04, 12, 18, 19, 21 மற்றும் 23 என்ற 06 கடைகள் உப வாடகைக்கு	சுற்றறிக்கையின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக சுற்றறிக்கையின் 18 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்குச் சொந்தமான காணிகள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்களுக்காக மாத்திரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணிச் செல்லப்படுவதுடன் ஏனைய சொத்துக்களுக்கான பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை.	அலுவலக உபகரணங்கள் நிலையான சொத்துப்பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும்.
(ஆ)	சபைக்குச் சொந்தமான 66 காணிகளின் உரித்துறுதியில் உள்ள வரைபடங்கள் காணப்படாத 46 காணிகள், உரித்துறுதி மற்றும் வரைபடங்கள் இன்றிய 14 காணிகள் மற்றும் உரித்துறுதி இன்றிய மற்றும் வரைபடம் உள்ள 03 காணிகள் காணப்பட்டதுடன் இந்தக் காணிகளின் உரித்து மற்றும் அளவினை முறையான பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் சபை பயன்படுத்துகின்ற 63 மயான நிலங்களின் உரித்தை கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கையேற்கப்படாத காணிகளை சபைக்கு கையேற்பதற்கும், காணிகள் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் உரிய உரித்துறுதி மற்றும் வரைபடங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு மேலதிகமாக 63 மயான நிலங்களின் உரித்தை கையளிக்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.	உரித்து மற்றும் அளவினை முறையான பிரகாரம் உறுதிப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	சபையின் காணிகளின் வேலி எல்லையினை அமைத்து சபையின் பெயர் பதாதைகளை பொருத்தி அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	தவட்டகொல்ல / பன்னல மயாண நிலங்களின் எல்லை வேலிகள் அமைக்கப்பட்டு தற்போது பாதுகாப்பு உறுதிபடுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் வேலி எல்லைகளை இட்டு பெயர் பதாதைகளை இட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.	காணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

3.3 செயற்திட்டம், இலக்குகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பெறுமதி ரூபா 950,000 ஆன பாதீட்டில் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 07 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.	மாதிரிகள் இல்லாதிருந்த பொருட்கள் அந்த சந்தர்ப்பத்தில் நிறுவனங்களில் காணப்படாமையின் காரணமாக அந்த ஆண்டில் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது.	ஆண்டில் நிறைவேற்ற வேண்டிய செயற்திட்டங்களை சரியாக இனங்கண்டு பாதீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு ஒதுக்கப்படல் வேண்டும்.

(ஆ)	சமுதாய அபிவிருத்திப் பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட 02 நிகழ்ச்சித் திட்டங்களில் 07 சதவீதத்திற்கும் 36 சதவீதம் ஆன குறைந்த பௌதீக செயல் முன்னேற்றம் பெறப்பட்டிருந்தது.	உதவி பெறுபவர்களில் மலசலகூடத்தை அமைத்தல் தாமதம் அடைந்தமையும் தேர்தல் நிலைமையினால் பூரணப்படுத்த முடியாதிருந்தது.	இலக்கிடப்பட்ட செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 05 வெற்றிடங்கள் மற்றும் 19 மிகை காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை விஞ்சி அமைய மற்றும் பதலீட்டு, ஒப்பந்த அல்லது நாளாந்த படிகளின் அடிப்படையின் கீழ் சேர்க்கப்பட்ட 04 ஊழியர்களுக்காக மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,600,570 செலுத்தப்பட்டிருந்தது.	கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் சேவையாற்றுகின்ற ஊழியர்கள் போதியளவில் இல்லாதிருந்தமையால் நாளாந்த அடிப்படையில் சுகாதாரத் தொழிலாளர்கள் மூன்று பேர் சேர்க்கப்பட்டிருந்தனர்.	வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் மிகை பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும்.
(ஆ)	சாரதி பதவியின் கடமைகளை மேவுகை செய்வதற்காக 05 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதுடன் ஏனைய பதவிகளில் மூன்று பேர்களுக்கும் சாரதி கடமைகள் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட சாரதிகளின் எண்ணிக்கையின் அளவு ஒன்று காணப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.	14 வாகனங்கள் காணப்படுவதுடன் 04 சாரதிகள் மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். அதனால் காணப்படுகின்ற வாகனங்களின் எண்ணிக்கைக்காக சாரதிகளின் எண்ணிக்கை போதியளவில் இல்லாதிருந்தமையால் ஏனைய பதவிகளில் ஊழியர்களுக்கு சாரதி பதவியின் கடமைகளை மேவுகை செய்ய ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	தேவையான உத்தியோகத்தர்கள் அளவினை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	சபையில் வருமான பரிசோதகர் உத்தியோகத்தர்களில் மூன்று பேர் வெற்றிடமாகக் காணப்பட்டமை வருமானத்தை அறவிடுவதில் செயற்திறனின்மைக்கு தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.	சபையில் வருமான பரிசோதகர் பதவியில் 03 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அது தொடர்பான உரிய பிரிவுகளுக்கு தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.	வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

3.5 வாகன முறைமை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குச் சொந்தமான டெக்டர் வண்டி ஒன்று 2023 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் ஓட்ட நிலைமையில் காணப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் தற்போது அது பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சபையின் சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட ஒவ்வொரு செயற்பாடுகளையும் அடைந்து கொள்வதற்குரிய குறித்துரைத்த கால அட்டவணை மற்றும் ஆரம்ப நோக்கங்களை அடைந்து கொள்ளும் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக ஸ்தாபிக்கப்பட வேண்டிய செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும்.	சரியாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் 05 வருமான விடயங்களை பாதீடு செய்யப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானங்களுக்கு இடையே 02 சதவீதத்திற்கும் 29 சதவீதத்திற்கும் இடையிலான முரண்கள் மற்றும் 08 செலவின விடயங்களில் பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டிற்கும் உள்ளபடியான செலவீனங்களுக்கும் இடையே 18 சதவீதத்திற்கும் 74 சதவீதத்திற்கும் இடையிலான முரண்களும் காணப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பயிற்சி அமர்வுகள் எதிர்பார்க்கப்பட்ட அளவினை விட குறைவடைந்தமை சில பயிற்சி நிகழ்சித் திட்டங்கள் இணையவழி ஊடாக நடாத்தப்பட்டமை, ஆண்டின் நடுப்பகுதியில் எரிபொருள் விலையில் வீழ்ச்சியடைந்தமை மற்றும் வழங்கல் உபகரணங்களுக்காக செலவாகின்ங தொகையினைக் கட்டுப்படுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டதன் காரணமாக இந்த முரண்கள் காணப்படுகின்றது.	பாதீடு செய்யப்பட்ட பெறுமதிக்கும் உள்ளபடியான பெறுமதிக்கும் இடையிலான முரண்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	வருடாந்தப் பாதீட்டின் மூலம் ரூபா 1,600,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 04 வேலைகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	வருடாந்தப் பாதீட்டின் மூலம் ரூபா 1,600,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த வேலைகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.	பிரதேசத்தின் மக்களின் தேவையினை நிறைவேற்றுவதற்காக நிதியேற்பாடு ஒதுக்கி அவற்றை அமுல்படுத்துதவற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களாக 2030 ஆம் ஆண்டு வரை உலகத்தில் சகல இடங்களிலும் வாழ்கின்ற மக்களில் வறுமை ஒழிப்பது போன்ற சபைக்கு அடைய முடியாத இலக்குகள் ஸ்தாபிக்கப்பட்டதுடன் சபையின் பிரயோக ரீதியிலான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்காண்பது தொடர்பில் கவனம் செலுத்தியிருக்க வில்லை.	பாதீட்டு நிதியேற்பாடு ஒதுக்கி செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கிக் காணப்பட்டுள்ளதா எனவும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்காக மீளாய்வாண்டில் நிறைவேற்ற வேண்டிய செயற்திட்டங்கள் காண்பிக்கப்பட்டுள்ளது.	பிரயோக ரீதியிலான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.